தமிழ்ச் சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்.

குரல் : 5.

இசை : 4.

விலை:

25 காசு.

பள்ளியை மூடுங்கள் !

படிப்பை நிறுத்துங்கள் !
பள்ளியை மூடுங்கள் !
பண்பாட்டிற் குயிர் ஊட்டுங்கள் !– வெறும்
நடிப்பெதற்கு ? – போலி
நடையெதற்கு ? – ஆடும்
நாடகத் திரை மாற்றுங்கள் !

அறிவை அடக்குங்கள்;
ஆய்வை ஒடுக்குங்கள்;
அகத்தினில் ஒளியேற்றுங்கள் ! – பணச்
செறிவெதற்கு ? – பொய்ம்மைச்
சிறப்பெதற்கு ? – கொண்ட
செயலுக்குத் தெளிவூட்டுங்கள் !

நிலவைப் பிடித்தென்ன ?
நிலத்தில் இருந்தென்ன ?
நிறைவான வாழ்வில்லையே ! – அற
நெறிகளெங்கே ? – மன
நேர்மையெங்கே ? – தீய
நிகழ்ச்சிக்கு வீழ்வில்லையே !

எழில்கூட்டும் நகரங்கள் !
எண்ணற்ற ஊர்திகள் !
ஏழ்மைக்கு விடிவில்லையே ! – கல்வி
ஏற்றமெங்கே ? – மெய்ம்மை
இன்பமெங்கே ? – புன்மை
இழிவுக்கு முடிவில்லையே !

செயலுக்குக் குறைவில்லை;
சீருக்குத் தாழ்வில்லை;
செலவுக்கு வரவில்லையே !– நல்ல
வயல்களுண்டு; – நீர்க்கால்
வாய்களுண்டு ! – வீணர்
வாய்க்கொரு பூட்டில்லையே !

தப்பித்தவறியே மாந்தனாய்ப் பிறந்தவன்!

தப்பித் தவறியே மாந்தனாய்ப் பிறந்தவன்
ஒப்புக்கு வாழ்கிறான் உலகில் – கொஞ்சம்
உப்புக்கும் விடிவில்லை வாழ்வில் – அவன்
வாழ்வில் – வெறும்
மெப்புக்குப் பேசியே
மேலுக்குப் பூசியே
தப்புக்குப் பூட்டிடுவீர்கள் – 'சரி
தான்' – என நாட்டிடுவீர்கள் !

காலுக்குச் செருப்பின்றிக், கையிலோர் காசின்றி
மேலுக்குத் துணியின்றி வாழ்வான் – உடல்
தோலுக்குக் காப்பின்றி நோவான் – நொந்து
சாவான் ! – ஆவின்
பாலுக்குத் தேன்விட்டுப்
பருப்புக்கு நெய்விட்டுக்
காலுக்கு மெத்தைகேட் பீர்கள்! – அவன்
கதையினைச் சொத்தையென் பீர்கள் !

படுக்கைக்குப் பாயின்றிப், பதுங்கவும் குடிலின்றிக்
கடுக்கின்ற வயிற்றுக்குக் கஞ்சி – கொஞ்சம்
கொடுக்கவே புகழ்ந்துமைக் கெஞ்சி – மிக
அஞ்சி – குளிர்
நடுக்கிடக் கைபோர்த்து,
முடக்கிடும் மெய்சேர்த்து
ஒடுக்கிய வாருயிர் தீய்ப்பான் – தெரு
ஓரங்க ளில்உயிர் சாய்ப்பான் !

வினைவிதைத் தானென்றும் விளைவிது தானென்றும்
புனைகதை பற்பல சொல்வீர் ! – உயிர்
போனாலும் போகட்டும் என்பீர் ! – தெற்றித்
தின்பீர் ! – உம்
மனைமாடு பெரிதென்று
மக்களே உயிரென்று
மனைவிக்குப் பட்டெடுப் பீர்கள் ! – அவன்
மண்டை, கல் விட்டுடைப் பீர்கள் !

வாட்டமுற் றிருப்பவர் வாழ்க்கையில் நொந்தவர்
கூட்டமெல் லாம், ஒன்று சேரும் – நம்
ஈட்டமெல் லாம் எண்ண நேரும் – இந்தப்
பாரும் – அதன்
ஊட்டமும் பொதுவாக்கி
உழைப்பையும் பொதுவாக்கித்
தேட்டமெல் லாம்வகுத் தீயும் – அந்தத்
தீமைக ளும்அடி சாயும் !

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்–5. | தி. பி. | ௨௲௨ | விடை; – மே 71 | இசை–4.

தெய்வமும் உண்மைகொல்!

உலகும் பொறுக்குமோ! உலகும் பொறுக்குமோ!
நிலந்துளி ஆளுமோர் நெஞ்சச் செருக்குடன்
யாகியா கான்–எனும் மாகய வாளி
கூகையும் குருவியும் போல்,பொது மக்களைச்
சுட்டுப் பொசுக்கியும் சூறை யாடியும்,
மொட்டையும் பூவையும்
பிஞ்சையும் சிதைத்தல்போல்,
கட்டிளங் கன்னியர் கற்பைக் குடித்தும்,
குழவிகள் இளையவர்
குருதியை உறிஞ்சியும்,
கிழவரும் அறிஞரும் எனப்பா ராமல்,

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1. தமிழகம்.

கோடிக் கோடியாய்க் கூட்டங் கூட்டமாய்
ஓடிப் பிடித்தும் உயிரொடு கொளுத்தியும்,
வேட்டம் ஆடிடும் வெறிமையும் பேய்மையும்
காட்டுத் தீயினுங்
கடுமையாய்க் கொடுமையாய்
வீறிடக் கண்டும், வெடித்து விழுங்காமல்,
உலகும் பொறுக்குமோ! உலகும் பொறுக்குமோ!

அரசும் இருக்குமோ! அரசும் இருக்குமோ!
கரிசெலாம் சேர்ந்துரு வாயஓர் களிமகன்
மனம்போன வாறெலாம் மக்களைத் – தம்முடை
இனமென்றும் உயிரென்றும்
எண்ணாது, இராப்பகல்,
என்றும் இலாதுபோல்–இனியும் இராதுபோல்
கொன்று குவிக்குமோர் கொலையிற் கொடுஞ்செயல் –
கண்ட பின்னரும், காதுகள் புண்படக்
கேட்ட பின்னரும் கிளர்ச்சியுற் றெழாமல் –
'நில்லடா' எனுமோர் வல்லொலி கொடாமல்
கல்லென இருந்து, காணியாள் கின்ற,பே –
ரரசும் இருக்குமோ! அரசும் இருக்குமோ!

மக்களும் இருப்பரோ! மக்களும் இருப்பரோ!
பொக்கெலாம் இணைந்துரு வானஓர் புல்லியன்
அரசுத் தலைவனென் றமைந்(து)–ஒரு சிறுநிலத்(து)
உரிமை கொண்டதால், உலகுடை யவன்போல்
ஆடுங் கோழியும் அறுத்தெறி வானாய்ப்
பீடும் பெருமையும் பெற்ற மக்களைச்
சிதைத்திடுங் கொடுமைக்குச் சிறிதா கிலும் – உளம்
பதைத்தி டாமலே, பதைப்பினுந் துடித்தெழா(து)
ஒக்கலுந் தாமுமாய், உண்டு களித்திடும்
மக்களும் இருப்பரோ! மக்களும் இருப்பரோ!

அறிஞரும் உளர்கொல்! அறிஞரும் உளர்கொல்!
வெறியெலாம் அமைந்துரு வான,ஓர் வெங்கணான்
ஆட்சியைக் கைப்பறித் தாள்திறன் அற்றதால்,
மீட்சி பெறவிழைந் தெழுந்த மேன்மையோன்
முசிபுர் இரகுமான்–எனுந்தலை முதல்வனை–
நசித்திடச் செய்திடும்
வெறியினால், நாட்டினைப்
பொட்டல் நிலமெனப் பொசுக்கியும், மக்களை
நட்ட நடுத்தெரு
நாய்களைப் போலவே
பட்டப் பகலினில், படைகளை ஏவிச்
சுட்டுத் தள்ளியும்,
வெட்டிப் புதைத்தும்
மதங்கொண் டிருக்கையில்–
மண்ணுக்கும் விண்ணுக்கும்
மிதந்திட விழைந்து மேலும் மேலும்
அறிவியல் நாட்டமுற் றாய்வு நடத்திடும்
அறிஞரும் உளர்கொல்! அறிஞரும் உளர்கொல்!

அறமும் உண்டுகொல்! அறமும் உண்டுகொல்!
மறமும் கொடுமையும்
மருவிப் பிறந்த, ஓர்
பட்டி யரம்பன்,இப் பாரெலாம் நடுங்கிட–
தட்டிக் கேட்க,ஓர் தகுவோர் இன்மையால்,
புலைமையும் கொலைமையும்
பொய்ம்மையும் தாம்பயில்
கலைகள் எனத்தன் கைத்திறங் காட்டல்போல்
கீழ்வங் காளத்துக் கேண்மையோர் தம்முயிர்
ஆழ்வெங் கடலுளே ஆழ்த்துவா னாயினன்!
அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாமெனும்
உரையிற் பராவிடும் உண்மைத் தமிழர்தம்
அறமும் உண்டுகொல்! அறமும் உண்டுகொல்!

தெய்வமும் உண்மைகொல் !
தெய்வமும் உண்மைகொல் !
செய்தவத் தோர்தாம் செப்பிய மாத்திறன் —
மெய்யறி வோருளம் மொய்த்திடு பேரிறை —
கையற் றூர்தமைக் காத்திடுங் கடிகா —
செய்வினைக் குறுதுணை
செயும்பே ராற்றல் —
இடர்ப்படு வார்தமை ஏற்றும்,ஏ மப்புணை —
சுடரொளி — அருட்கடல் —
சூழ்ந்த பரம்பொருள் —
பொய்ம்மையும் புன்மையும் போழ்க்குமென் றுரைத்த
தெய்வமும் உண்மைகொல் !
தெய்வமும் உண்மைகொல் !



அருஞ் சொற் பொருள் :

மாகயவாளி — பெருங்கயவன் (வரி–3.)
கரிசு — பாவம் (வரி–17)
களிமகன் — குடியன் (வரி–17)
காணியாளுதல் — உலகை யாளுதல் (வரி–25)
பொக்கு — பொய், குற்றம் (வரி–28)
வெங்கணன் — கொடிய கண்களையுடையவன் (வரி–38)
பட்டி அசம்பன் — யாருக்கும் அடங்காத தான்தோன்றி (வரி–53)
பராவிடல் — பாராட்டுதல் (வரி-60)
மாத்திறன் — பேராற்றல் (வரி–63)
கையற்றூர் — துன்புற்றூர் – துணையாற்றூர் (வரி–65)
கடிகா — வலிய காவல் (வரி–65)
ஏமப்புணை — காவற்படகு (வரி–67)
போழ்க்கும் — வெட்டிச் சிதைக்கும் (வரி–69)

பெரியோர் கதை!

வங்க விடுதலை மறவன்

முசிபுர் இரகுமான்

க. க. ஆறுமுகம், பழநியம்மான்.

கிழக்கு வங்கத்தில் இன்று மானத்திற்காகவும்–மண்ணுக்காகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப் படையின் மாபெருந் தலைவர் முசிபுர் இரகுமான். இவர் கிழக்கு வங்கத்தில் பரீத்பூர் மாவட்டத்தைச் சார்ந்த துங்கிபாராக் எனும் சிற்றூரில் நடுத்தர வேளாண்மைக் குடும்பம் ஒன்றில் 1920–ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 17–ஆம் நாள் பிறந்தார். இளமையில் சுறு சுறுப்பும், செயல் திறனும் மிக்கு உள்ளவராக இருந்தார். கிழக்கு வங்கத்தில் கோபால் கஞ்ச் மிசின் பாடசாலையில் இவர் ''மெட்ரிகுலேசன்'' தேர்வில் தேறினார். அதன் பின்னர் இவர் கல்கத்தா இசுலாமியா கல்லூரியில் சேர்ந்தார். அங்குப் பட்டப் படிப்பை முடித்துக்கொண்ட பின்னர் சட்டம் பயின்றார்.

இவரின் கல்லூரி வாழ்க்கையில் பெரும்பாலும் நாட்டின் விடுதலையைப் பற்றியும் – தனி மாந்தனின் உடைமையைப் பற்றியும் – நண்பர்களிடமும், ஆசிரியர்களிடமும் பேசுவாராம். கல்லூரியில் படிக்கும் போதே அரசியலில் நுழைந்த இவர், சிறந்த அமைப்பாளராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தாராம். சட்டப்படிப்பை முடித்துக் கொண்டு இவர் உயிர்முறிக் குழும்பு (இன் சூ ர ன் சு) முகவராகத் தொழில் செய்தார். இவரின் மனத்திண்மைக்கும், துரு துருப்பான வாழ்க்கை நிலைக்கும் இந்தத் தொழில் அவருக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இந்த நிலையில் ....

1948-ஆம் ஆண்டு மார்ச்சுத்திங்கள் 21-ஆம் நாள் கிழக்குப் பாகித்தானின் தலைநகரான டாக்காவில் பாகித்தானின் முதல் குடியரசுத் தலைவர் முகம்மது அலி சின்னு, "உருது மொழி தான் இந்த நாட்டின் பொது மொழியாக ஆகப் போகின்றது. அதைப் பற்றி யாரும் ஐயம் கொள்ள வேண்டா. யாராவது அதனை எதிர்த்து எதையாவது கூறினால் அவர்கள் பாகித்தானின் எதிரிகள்" என்று கூறினார்.

28அகவை கூட முடியாத இளைஞரான இரகுமானும் இன்னும் இளைஞர் பலரும் சேர்ந்து இதை எதிர்க்கத் துணிந்தார்கள். அவர்களுக்குத் தலைவராக இரகுமான திகழ்ந்தார். "வங்க மொழியே கிழக்குப் பாகித்தானின் ஆட்சி மொழி" என அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர். முசிபுர் இரகுமான் உட்பட அனைவரும் சிறையில் தள்ளப்பட்டனர். அன்று தொடங்கியது விடுதலைப் போர்ப் பரணியின் முதல் முழக்கம்.

பாகித்தான் அமைக்கப்பட்ட ஏழாவது மாதத்திலேயே காய்தே ஆசாம் அவர்களை எதிர்க்கத் துணிந்தார் மூசிபுர் இரகுமான். பாகித்தான் நடுவணரசுக்கு எதிராக நடத்தப்பட்ட முதல் போராட்டம் இதுதான். இந்தப் போராட்டத்தின் விளைவு இரகுமானுக்கு 10-ஆண்டுச் சிறைத் தண்டனை. கான் அப்துல் காபர் கானுக்கு அடுத்து மிகுந்த நாள் சிறையில் இருந்தவர் முசிபுர் இரகுமான்தான்.

வங்க மொழிக்காக முசிபுர் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தின் ஈட்டி முனையாக இவருடன் இளைஞர்கள் பின் நின்றனர். 1952-இல் பாகித்தான் அரசு கொடும் அடக்கு முறையை ஏவி விட்டு இந்தப் போராட்டத்தை ஒடுக்கியது. 1954-இல் கிழக்குப் பாகித்தான் சட்டமன்றத்திற்கு முசிபுர் இரகுமான் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் கிழக்கு வங்க மக்கள் முசுலீம் லீகிற்குப் படு தோல்வியைத் தந்தனர். பசலுல்ஆக் தலைமையில் அரசு அமைந்தது. முசிபுர் அமைச்சரவையில் இடம் பெற்றார். சிறிது காலத்திற்குள்ளாகவே அரசவை கலைக்கப்பட்டுப் படைச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. முசிபுர் மீண்டும் சிறையில் தள்ளப்பட்டார்.

(3-ஆம் பக்க அட்டையைப் பார்க்க)

முன்கதைச் சுருக்கம் :

ஆண் துணையிழந்த பெண் கழுதையொன்று தன் பெட்டைக் குட்டியிடம் தனக்கு நேர்ந்த துயரையெல்லாம் ஒருநாள் சொல்லி வருந்தி அழுதது. பிறகு இரண்டும் சேர்ந்து தங்களுக்குத் துணையாக வந்த ஒரு காளை மாட்டுடன் சேர்ந்து கொண்டு, துன்பமும் மக்களின் தொல்லையும் மிகுந்த நாட்டை விட்டு விட்டுக் காட்டுக்கு ஓடிப்போய் விடுவதென முடிவுகட்டிப் புறப்பட்டன. மாலை யெல்லாம் நடந்து, இருட்டுகின்ற நேரத்தில் மூன்றும் ஒரு காட்டை அடைந்தன. அங்கிருந்த பாழ்மண்டபம் ஒன்றில் திருடர்கள் விட்டுச் சென்ற உணவுப் பொருள்களை உண்டு அன்றிரவு நன்றாய் உறங்கின.

மறுநாள் விடியலில் கழுதை எழுந்த பொழுது தன் குட்டியைக் காணாமல் துடிதுடித்தது. பிறகு காளையும் கழுதையும் சேர்ந்து பல இடங்களில் தேடியும் குட்டி கிடைக்காமல் போகவே, கழுதை தன் நிலைக்குப் பெரிதும் வருந்தி, மனமுடைந்து, தற்கொலை செய்து கொள்வதற்காக ஓர் ஓடையில் குதித்தது. ஆனால் ஓடையில் தண்ணீர் மிகவும் குறைவாக இருந்ததால் அது நீரில் மூழ்கி இறக்காமல் வருந்திக் கரையேறியது.

தன்னை உடன் அழைத்துக்கொண்டு வந்து இடையில் தான் மட்டும் இறந்து போவது பிழை யென்று காளை கழுதைக்குக் கூறி, அதைத் தேற்றி, உலகில் துன்பமும் இன்பமும் கலந்தே இருப்பதையும், அதனால் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை யென்றும் உணர்த்தி, அதை மேலும் அழைத்துக் கொண்டு காட்டின் உட்பகுதிக்குச் சென்றது.

இவ்வாறு போய்க் கொண்டிருக்கையில் இரண்டும் களைப்படையவே, ஓரிடத்தில் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பி அமரத் தொடங்கின. அப்பொழுது காடே அதிரும் படியாகவும் காது செவிடாகும் படியாகவும் எங்கிருந்தோ ஒரு வேட்டொலி கேட்டது அதைக் கேட்ட இரண்டும் அஞ்சி யெழுந்து நடுங்கிக் கொண்டு நிற்கையில், இடிமுழக்கம்போல் ஓர் அரிமா (சிங்கம்) வீறிட்டு அலறும் ஒலி கேட்டது. இதைக் கேட்டுக் காளையும் கழுதையும் மிகவும் அஞ்சி, திசைக்கு ஒன்றாக ஓடிப் பிரிந்தன. நெடுந்தொலைவு ஓடியபின் கழுதை தன்னந்தனியாக இருப்பதற்கு வருந்தி, காளையையும் குட்டியையும் தேடிக்கொண்டு காட்டின் உட்புறத்தை நோக்கி மெதுவாய் நடந்து சென்றது. மாலை வரை தொடர்ந்து நடந்ததால் கழுதை மிகவும் களைப்படைந்தது. அதன்பின் இருள் சூழவே, கழுதை மிகுந்த மனச்சோர்வும் உடல்சோர்வும் கொண்டு தள்ளாடி, ஓர் இடத்தில் நின்று, படுப்பதற்காகச் சுற்றும் முற்றும் பார்க்கையில், அது நின்ற விடத்திற்கு மிக அருகில், நெருப்புப்போன்ற இரண்டு விழிகள் தென்பட்டதைக் கண்டது. கண்டதும் உள்ளம் பதறி, "ஓ, நமக்குத் தீங்கு வந்து விட்டது" என்று உணர்ந்து ஓட்டம் எடுக்கத் தொடங்குகையில், "நில்"–என்று ஒரு சொல் நிலம் அதிரும்படி கேட்டது.

'நில்'லென்ற சொல்கேட்டு
    நின்ற கழுதையுடல்
'சில்'லிட்டுப் போனது;
    உயிர்சென்று மீண்டதே!

உள்ளம் திகைத்தே
    உடல்நடுங்கி நின்றிருந்த
கள்ளமிலாப் பெண்கழுதை
    காலடியில் ஓருருவம்
வந்தே உராய்ந்திடவும்,
    வாலைச் சிலிர்த்தபடி
உந்திக் குதித்தே
    உயிர்குலைந்து கீழ்நோக்க,
வல்லரிமா* ஒன்று
    வயிற்றால் தரையூர்ந்து,
மெல்லவே வாலசைத்து,
    மேல்நோக்கிப் பார்த்தபடி

* (சிங்கம்)

கண்களிலே நீர்வழியக்
காலொன்றை மேல்தூக்கிப்
புண்ணொன்றைக் காட்டி, ஒரு
பூனைபோல் காட்சிதரும்!

வானத்தில் வெண்ணிலவு
வந்துஒளி சிந்தியதால்
கானத்தின் உட்புறத்தில்
காணும் மரங்களிடை
உள்ள பொருள்கள்
ஒளிர்ந்து விளங்கினவே!
பள்ளம்மே டெல்லாம்
பளிச்சென்று தோன்றிநிற்கும்!

அந்த ஒளியில்
அரிமாவின் தோற்றத்தை
நொந்தஉளத் தோடு
கழுதையம்மை நோக்கிற்று!
நீண்டு சிலிர்த்து
நிறைந்த பிடரிமயிர்!
பூண்டதொரு நீள்வால்!
பூரித்து நின்றமறம்!
திண்ணிய கால்கள்!
திசைகாட்டும் முள்மீசை!
கண்ணில் நெருப்புருண்டை!
கால்களிலே கூருகிர்கள்!
தாமரை நாத்தொங்க
தாடைவாய்ப் பல்தெரிய
மாமல்லன் வீறுடலம்
மண்ணில் கிடப்பதுபோல்
ஆணரிமா தன்கால்
அடியில் கிடந்ததனை
மாணப் பெருமையென
எண்ணி மதித்தாலும்,

கடந்த ஒருநூற்றுண்டில் (19ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியும் 20ஆம் நூற்றுண்டின் முற்பகுதியும்) தன் வாழ்வியல் துறைகளில் சப்பான் மாபெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளது சந்தைக்குத் தேவையான-மலிவான-சிறந்த பொருள்களை உருவாக்கித் தரும் தொழில்வளம் வாய்ந்த நாடாக விளங்குகின்றது. இதன் விளைவாகச் சப்பானிய மக்கள் வீட்டு வாய்ப்பு, ஊட்டமான உணவு, நிறைந்த ஓய்வு, பயனுள்ள பொழுது போக்கு ஆகியவற்றைப் பெற்று இன்புற்று வருகின்றனர். மின்சாரக் குளிர்காப்புப் பெட்டிகள், மின்னியக்கச் சலவைப் பொறி, தானியங்கிச் சமையற் பொறி, தொலைக்காட்சிப் பெட்டிகள்-ஆகிய புதுமுறை அறிவியற் கருவிகள் குடும்பப் பெண்களின் உழைப்பைக் குறைத்து, அறிவு வளர்ச்சிக்குத் தேவையான ஓய்வை அவர்கட்கு வழங்கியுள்ளன.

இத்தகைய புதிய வாழ்க்கைவளம் நகர மக்களுக்கு மட்டுமே யன்றிச் சிற்றூர்ப் பகுதிகளுக்கும் தடையின்றிக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பண்ணையில் உள்ள கூரை வீடுகளின்மீது தொலைக்காட்சி வான்கம்பியும், கொல்லைப்புறங்களில் மின்சாரச் சலவைப் பொறிகளும், குடிசைகளின் முன்புறத்தில் மிதியுந்து வண்டிகளும் காணப்படுவது அன்றாட நிகழ்ச்சியாக வுள்ளது.

எனினும், இந்நாட்டுப் பொருளியல் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள ஒன்று, இயற்கை வளங்களின் பற்றாக் குறையே யாகும். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ற அளவில் இருப்பிடம், உணவு, உடை ஆகியவற்றை அளிப்பதுடன் மக்களுக்கு வாழ்வு தரும் தொழில் வளர்ச்சிக்கும் சப்பான் தனது வெளிநாட்டு வாணிகத்தையே நம்பியிருக்க வேண்டிய நிலையுள்ளது. தொழிற்-சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களையும்கூட, அது பிற நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்தல் வேண்டும். இதற்கு வேண்டிய பணத்தை அது தன் நாட்டு மக்களின் உழைப்பினுலேயே பெறவேண்டிய நிலையில் இருக்கின்றது.

நிலவியல் :

சப்பான் நாட்டின் பெரிய தீவுகள் நான்கு. அவை : ஒன்சு (Honshu), சிக்கொக்கு (Shikokku), கியூசு (Keushu), ஒக்கெய்தோ (Hokeido) என்பன. இவற்றுடன் ஆயிரக்

கணக்கான சிறுதீவுகள் சேர்ந்துள்ளன. சப்பானைச் சேர்ந்த தீவுக் கூட்டத்தின் நீளம் 2400 ஆயிரச் சிறுகோல் (கிலோ மீட்டர்). பரப்பளவு 3,69,662 சதுர ஆயிரச் சிறுகோல் ஆகும்.

இரண்டாம் உலகப்போரின் இறுதியில், சப்பான் தனது கடல் கடந்த ஆட்சி நாடுகள் அனைத்தையும் இழந்துவிட்டது. இன்றைய சப்பானின் பரப்பளவு அமெரிக்க ஒன்றிப்பு நாடுகளின் பரப்பில் 20-இல் ஒரு பங்குக்கும் குறைவானது இந்திய நிலப்பரப்பின் 8-இல் ஒரு பங்குக்குச் சமமானது.

சப்பான் தீவுகள் சமவெப்ப மண்டலத்தில் அமைந்துள்ளன. மழை மிகுதியும் உண்டு. குளிர்காலத்தில் வடக்குப் பகுதியில் கடும்பனி இருக்கும். நாடு முழுவதும் மலைத் தொடர்கள் பரவியுள்ளன. சப்பானின் பரப்பளவில் 85 விழுக்காடு மலைகளே ஆகும். இங்குள்ள மலைகளில் மிக உயர்ந்தது ஃபூசி மலையாகும். இதன் உயரம் 12,389 அடியாகும்.

சப்பான் நாட்டில் 192 எரிமலைகள் இருக்கின்றன. இவை கவர்ச்சியான வெண்ணீர் ஊற்றுக்களைத் தோற்றுவிக்கின்றன. இவை அமைதியையும் ஓய்வையும் நாடிச்செல்வோர் மகிழ்ச்சியாகப் பொழுது போக்குவதற்கு ஏற்ற இடங்களாக உள்ளன. மேலும், இம்மலைப் பாங்கான பகுதிகளில் அமைந்த பனிபடர்ந்த ஏரிகள், பாறைகளின் இடுக்குப்பாதைகள், கரைபுரண்டோடும் ஆறுகள், கரடு முரடான உச்சிகள்-இவையனைத்தும் கண்கவர் வனப்பினவாய் உள்ளன. குளிர்காலத்தில் பனிச்சறுக்கு விளையாட்டுக்காரர்களுக்கு இம்மலைப்பகுதிகள் நல்ல வாய்ப்பளிக்கின்றன.

1965ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் எடுக்கப்பட்ட கணக்கின்படி சப்பானின் மக்கள் தொகை 9,82,74,961.

வரலாறு :

இந்நாட்டின் வரலாறு, புதிய எழுச்சிகளும் பழமையின் தொடர்ச்சியும் கலந்த, வியக்கத்தக்கதோர் அமைப்பாகும். சென்ற ஒரு நூற்றாண்டில் — 1868, 1945-ஆம் ஆண்டுகளில் இருபெரும் எழுச்சிகள் நிகழ்ந்துள்ளன. எனினும் இந்நாட்டு மக்களின் மரபுவழி இயல்புகளான ஒருமைப்பாடு, ஒழுங்கு, கொள்கை என்பன எவ்வகை மாற்றமும் இன்றி நிலையாகவே உள்ளன.

இந்நாட்டுப் பழங்குடி மக்கள் கிழக்கு ஆசியாவிலிருந்தும், தென் பசிபிக் தீவுகளிலிருந்தும் வந்தவர்கள் என்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். இன்றுள்ள யமாத்தோ இனத்தினரின் முன்னோரே இப்பழங்குடி மக்கள் என்றும், இவர்கள் கி. பி. 4ஆம் நூற்றுண்டளவில் பிற கூட்டங்களை வென்று தங்களை நிலைப்படுத்திக்கொண்டனர் என்றும் கூறுகின்றனர்.

4-ஆம் நூற்றுண்டின் இறுதிக்குள் சப்பானுக்கும் கொரியா-வுக்கும் இடையே தொடர்பு ஏற்பட்டுவிட்டது. நெசவுத் தொழில், மாழைத் தொழில், கப்பல் கட்டுதல் ஆகியவை கொரியாவிலிருந்து அறிமுகப்படுத்தப் பட்டன இந்தத் தொடக்க நிலையில் சப்பான் சீனத்திலிருந்தும் கொரியாவிலிருந்தும் கலை, அறிவியல் நுட்பங்களையும் பெற்று, அவற்றை அடிப்படையாகக் கொண்டு, தனக்கே உரியதொரு பண்பாட்டை உருவாக்கிக் கொண்டது.

சப்பானியர் சீன எழுத்துகளின் வாயிலாகவே மருத்துவம், கணிதம், வானவியல், ஆகியவற்றையும் கன்பூசியக்கொள்கையையும் பெற்றனர். கொரியா, சீன நாடுகளின் வழியாகவே பின்னர் பௌத்த சமயமும் பரவியது. சீன நாட்டு அரசியல் முறையிலிருந்தே சப்பானிய மன்னர்கள் தங்கள் அரசியலமைப்பை வகுத்துக்கொண்டனர்.

கி. பி. 5ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சப்பானின் நிலையான தலைநகரமாக நாரா நகரம் அமைக்கப்பட்டது. கி. பி. 704-இல் கியோத்தாவில் புதிய தலைநகர் ஏற்படுத்தப்பட்டது. இது நிகழ்ந்தது எய்யாவின் ஆட்சித்தொடக்கத்தில் ஆகும். 9-ஆம் நூற்றுண்டின் இறுதியில் சீனத்துடன் சப்பான் கொண்டிருந்த தொடர்புகள் குலையத் தொடங்கின.

இதன்பின், சப்பான் பல்வேறு அரசமரபினரின் ஆட்சிக்கு உள்ளாயிற்று. இவர்களில் மொய்சி மன்னரின் ஆட்சி குறிப்பிடத்தக்கது. இவரது ஆட்சிக்காலம் 1867 — 1912. இவர், முன்பு கியாத்தோ தலைநகரமாக இருந்ததை மாற்றி எதோவைச் சப்பானின் தலைநகரம் ஆக்கினர். இந்நகரமே இப்பொழுது டோக்கியோ என வழங்கப்படுகிறது. இதன் பொருள் கிழக்கத்திய தலைநகரம் என்பதாகும்.

1912இல், முதல் உலகப்போர் தொடங்குவதற்குமுன் மொய்சி மன்னர் இறந்தார். இதன்பின் தைகோ மன்னர் பதவிக்கு வந்தார். அவருக்குப் பின்னர், இன்றைய மன்னர் இரோகித்தோ (Hirohito) 1926இல் ஆட்சி ஏற்றார்.

அரசியல் :

1946ஆம் ஆண்டு நவம்பர் மூன்றும் நாள் சப்பான் தனது அரசியலமைப்புச் சட்டத்தினை வெளியிட்டது. இது, மறு ஆண்டு மே மூன்றும் நாள் முதல் செயல்முறைக்கு வந்தது. இவ்வரசியலமைப்பின்படி, அமைதியையும் குடியாட்சி முறையின் உயர்ந்த நோக்கங்களையும் காப்பாற்றுவதெனச் சப்பானிய மக்கள் உறுதி பூண்டனர்.

"சப்பானிய மக்களாகிய நாங்கள் என்றும் அமைதியையே விரும்புகிறோம். அமைதியைப் பேணிக் காக்கவும், வல்லாண்மை, அடிமை, கொடுங்கோன்மை, பொறுமையின்மை ஆகியவற்றை என்றென்றைக்கும் இவ்வுலகிலிருந்து விலக்கப் பாடுபடும் அனைத்துலக மக்கட்குழுவில் சிறப்பு மிக்கதோர் இடத்தைப் பெறவுமே நாங்கள் விரும்புகிறோம்" என்று இவ்வரசியலமைப்பின் முன்னுரை மொழிகிறது.

1889 இல் வெளியிடப்பட்ட மொய்சி அரசியலமைப்பினின்று இப்புதிய அரசியலமைப்பு பலவகைகளில் வேறுபட்டதாகும். இதன்படி, அரசு, மக்களின் ஒற்றுமை ஆகியவற்றின் அடையாளமாக மன்னர் பெருமான் இருப்பார். அதிகாரங்கள் அனைத்தும் மக்களிடமே இருக்கும்.

பழைய பெருமக்கள் அவைக்கு (பிரபுக்கள் சபைக்கு) மாறாக, இப்பொழுது உறுப்பினர் (Counsil) அவை (மேலவை) அமைக்கப்பட்டுள்ளது. இதன் உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். உறுப்பினர் அவையை விட, படிநிகராளியர் (பிரதிநிதிகள்) அவை மிக்க அதிகாரம் வாய்ந்தது.

ஆட்சிப்பொறுப்பு அமைச்சரவையிடம் உள்ளது. அமைச்சரவை பாராளுமன்றத்திற்குக் கட்டுப்பட்டது. கூட்டுப்பொறுப்பு

உடையது. ஆட்சியைப் பொறுத்த வகையில் மன்னர் பெருமானுக்கு எவ்வகை அதிகாரமும் இல்லை அரசியலமைப்பு வரையறுத்துள்ள வண்ணம் அவர் செயற்படுவார். முதலமைச்சரையும், தலைமை முறைமன்றத் தலைவரையும் அவரே பதவியில் அமர்த்துகின்றார். அமைச்சரவையின் ஒப்புதலையும் கருத்துரைகளையும் பெற்று ஒப்பந்தங்களை வெளியிடுவது, பாராளுமன்றத்தைக் கூட்டுவது, சிறப்புகள் வழங்குவது போல்வன மன்னரின் பொறுப்புகள் ஆகும்.

பாராளுமன்றம் :- சப்பானின் பாராளுமன்ற ஆட்சிமுறை, பிரிட்டனின் ஆட்சி முறையைப் பெரிதும் ஒத்ததாகும். இப்பாராளு மன்றம் டயட் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. சட்டமியற்றும் பொறுப்பு இதனுடையது. இதன் இரண்டு உறுப்புகள் உறுப்பினர்கள் அவையும், படிநிகராளியர் அவையும் ஆகும். முன்னது 486 இடங்களைக்கொண்டது. பின்னதில் 250 இடங்கள் உள்ளன.

படிநிகராளியர் அவை உறுப்பினர்கள் நான்காண்டுகட்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஆனால் அவை கலைக்கப்படும் நிலை எழுமானால், இந்த நான்காண்டுக்காலம் முடியும் முன்னரே பதவி இழக்க நேரலாம்.

உறுப்பினர்கள் அவையின் பதவிக்காலம் ஆறாண்டுகள் ஆகும். அதன் உறுப்பினர்களில் பாதிப்பேர் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர்.

சப்பானில் இருபது அகவை உடைய ஆண், பெண் எல்லாருக்கும் தேர்தலில் ஒப்போலை அளிக்க உரிமை யுண்டு.

அரசியற் கட்சிகள் :- சப்பானின் பெரிய அரசியல் கட்சிகள் மூன்று. அவை : (1) மென்முறை குடியரசுக் (லிபரல் டெமாக்ரடிக்) கட்சி, பொதுவுடைமைக் கட்சி, குடியரசுப் பொதுவுடைமைக் கட்சி என்பன. இவற்றுள் இன்று ஆளும் கட்சியாக இருப்பது முதலிற் குறிப்பிட்டுள்ள கட்சியே ஆகும்.

(6–ஆம் பக்கத் தொடர்ச்சி)

1955–இல் முசிபுர் அரசியல் அமைப்பவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறிது காலம் வாணிக அமைச்சராகப் பணியாற்றினர். சிறிது காலத்தில் முதலமைச்சரோடு ஏற்பட்ட கருத்து வேறுபாடு கரணியமாக அமைச்சரவையிலிருந்து விலகினர். மீண்டும் நடுவணரசு தலையிட்டது. அயூப்கான் நடுவண் ஆட்சியைக் கைப்பற்றினர். முசிபுர் மீண்டும் சிறை செய்யப்பட்டு 1960–இல் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தியாவிற்கும் பாகித்தானுக்கும் இடையில் 1965–இல் மோதல் ஏற்பட்ட பின் அயூப்கானின் பட்டாள வெறி அதிகாரத்தை முசிபுர் இரகுமான் கடுமையாகக் கண்டித்தார். இந்தியாவிற்கும் பாகித்தானுக்கும் இடையே மோதல் ஏற்படுவதை அவர் எதிர்த்தார். காசுமீருக்கு வாக்கெடுப்பு நடத்தக் கோருவதற்கு முன்னல், அத்தகைய வாக்கெடுப்பைக் கிழக்குப் பாக்கித்தானுக்கு நடத்துமாறு அயூப்கானுக்கு அழைப்பு விடுத்தார், முசிபுர் இரகுமான். 1966–இல் வங்க தேசத்திற்குத் தன்னுட்சி உரிமை வழங்கக்கோரி மக்கள் இயக்கத்தை 'அவாமி லீக்' தொடங்கியது. முசிபுர் இரகுமான் ஆறு கொள்கைத் திட்டத்தை அமைத்து மக்கள் முன் வைத்தார். அந்த ஆண்டில் மட்டும் இரகுமான் மூன்றுமுறை சிறை செய்யப்பட்டார். மூன்று முறையும் அறமன்றம் அவரை விடுதலை செய்தது. 1968–இல் இந்தியாவோடு சேர்ந்து முசிபுர் இரகுமான் இரண்டகம் செய்ததாக அயூப்கான் குற்றஞ் சாட்டினர். முசிபுர் மீண்டும் சிறை செய்யப்பட்டார்.

நாட்டில் ஏற்பட்ட அரசியல் போராட்டத்தைத் தணிக்க 1969–இல் அயூப்கான் அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பேச அணியமாக இருப்பதாக அறிவித்தார். இந்தப் பேச்சு நடத்த வேண்டுமானல் முசிபுர் இரகுமான் விடுதலை செய்ய வேண்டும் என மற்ற எல்லாக் கட்சித் தலைவர்களும் கோரினர். முசிபுர் விடுதலை செய்யப்பட்டார்.

அயூப்கான் அரசியல் போராட்ட காரணத்தால் ஆட்சிப் பீடத்தை விட்டு வெளியேற வேண்டி நேரிட்டது. அதன் பின்னர் படை அதிகாரியான யாகியாகான் ஆட்சியில் அமர்ந்தான். முதன் முறையாக அகவை வந்தவர்களுக்கு ஒப்போலை உரிமை என்ற அடிப்படையில், தேர்தல் நடைபெற்றது. தன்னுட்சி உரிமைக்

கோரிக்கையை முன்வைத்து முசிபுர் இரகுமான் மாபெரும் வெற்றியை அடைந்தார். ஆனல் அதிகார வெறியும், அகச் செருக்குப் போக்கும் கொண்ட யாகியாகான் கிழக்கு வங்க மக்கள் அளித்த தீர்ப்பை மதிக்கவில்லை. அதற்கு மாருகப் படைகளை ஏவி விட்டு ஒன்றும் அறியாத ஏதிலி மக்கள் எல்லாரையும் கொன்று குவித்தான். விடுதலை வேட்கை கொண்ட வங்க மக்களும் பொங்கி எழுந்து விட்டனர். ஒன்று மானத்துடன் வாழ்வது; இல்லை - வங்க மண்ணுக்குத் தம் உயிரைக் கொடுப்பது என்று அனைவரும் உறுதி எடுத்துக் கொண்டனர். பள்ளியில் படிக்கும் சின்னக் குழந்தைமுதல் நாளை இறக்கப்போகும் கிழவன் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து விட்டனர். 'வங்காளம் நமதே' என்ற மாபெரும் மக்கள் குரல் இராவல் பிண்டியில் அமர்ந்திருக்கும் யாகியாகானை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது. மாபெரும் பட்டாளப் படையும், தகரி (டாங்கி)ப் படையும், கொண்டு வங்க மக்கள் கொல்லப்படுகின்றனர். வங்க மக்களும் இன்னும் எத்தனை உயிர், எத்தனை உயிர் என்று இறுமாப்புடன் முன் நோக்கிக் கொண்டிருக்கின்றனர். வங்க மக்களுக்கு உதவி செய்ய எந்த நாடும் இது வரை முன் வரவில்லை. வல்லரசுகள் என்று சொல்லப்படும் புல்லரசுகள் எல்லாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. இறக்க மற்ற அரக்கத் தனத்துடன் ஒரு நாட்டை அரத்த வெறியும், அதிகாரச் செருக்கும் கொண்ட ஒரு தனி நாடு விடுதலை வேட்கை கொண்டு உரிமையைக் கேட்டுப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் அனைவரையும் கொன்று குவிக்கிறது என்ருல் அதன் பொருள் என்ன? உலக அறமன்றமான உலக ஒன்றியக் கழகம் ஏன் இருக்க வேண்டும்? இஃது எல்லாம் வெறும் கண் துடைப்புகள். அறிவியல் கலையில் இந்த நாடுகள் எத்துணைதான் முன்னேறி என்ன பயன்? ஒன்றும் இல்லை. மக்களை விலங்குகளை விட இழிவாகக் கருதி வேட்டையாடும் ஒரு நாட்டைக் கண்டிக்க இவ் வல்லரசுகளுக்குத் துப்பு இல்லை. இந்த நிலைக்கு உலக நாடுகள் அனைத்துமே ஒரு காலத்தில் தலை குனிய வேண்டிவரும். வங்க மக்களுக்கு உலக நாடுகள் அனைத்தும் விடை கூறியே ஆகவேண்டும். அப்போது அதன் தலைகள் நிமரப் போவதில்லை. இஃது உண்மை. 0

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.